## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## TAMIL VIRTUAL ACADEMY

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**நவம்பர் – டிசம்பர் 2018**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

### பிரிவு – 1

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. நீதி நூல் திரட்டு என்னும் நூலை எழுதியவர் யார்?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளது?
3. சிறுபஞ்சமூலம் என்பதன் பொருள் யாது?
4. முத்தமிழ்க் காப்பியம் என்று அழைக்கப்பெறுவது எது?
5. கூடலின் பொருள் என்ன?
6. பாம்பின் நாக்கு எப்படி இருக்கும்?
7. பாரதியார் பிறந்த ஆண்டு யாது?
8. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது?
9. வினா எத்தனை வகைப்படும்?
10. யாப்பு என்பது யாது?

### பிரிவு – 2

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. ஐம்பூதங்கள் கடவுளை எவ்வாறு வணங்குகின்றன?
2. சான்றோர்க்கு அணியாவது யாது?
3. நான்மணிக்கடிகை எந்த வகை நூலுள் அடங்கும்?
4. தீவலம் செய்தவர் யாவர்?
5. குமரியாடி வடதிசைக்கு ஏகும் நாரையைப் புலவர் தங்கச் சொன்ன இடத்தின் பெயர் என்ன?
6. மழை முகில் கண்டு வானில் பறந்து திரிவன யாவை?
7. பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?
8. வேலி போடுவதன் நோக்கம் யாது?
9. தம்பி அழுத கண்ணீரில் குளித்தது யாது?
10. திருமாலை எந்தக் கோலத்தில் கண்டதாக திருமங்கை ஆழ்வார் கூறினார்?

11. நடுகல் என்பது என்ன?
12. காவிரிப்பூம்பட்டினம் எந்த ஆற்றின் கரையில் உள்ளது?
13. இலக்கிய வகைச் சொற்கள் யாவை?
14. ஆகுபெயர் என்றால் என்ன?
15. நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?

## பிரிவு – 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. நற்குடிப் பிறப்பு பற்றி நான்மணிக்கடிகை கூறுவன யாவை?
2. வெள்ளம் வருவதற்குரிய அறிகுறிகளாக முக்கூடற்பள்ளு கூறுவன யாவை?
3. தமிழின் மேன்மை பற்றி சாலை இளந்திரையன் கூறுவன யாவை?
4. நன்மைகள் எல்லாம் தரக்கூடிய நாராயணா (திருமால்) என்னும் மந்திரத்தைக் கண்டுகொண்டதாகத் திருமங்கை ஆழ்வார் யாது குறிப்பிடுகிறார்?
5. 'குற்றாலம்' என்னும் பாடப் பகுதியின் மையக்கருத்தை எழுதுக.
6. 'வலவன் ஏவா வான ஊர்தி' என்றால் என்ன?
7. கொளல் வினா – கொடை வினா இரண்டிற்கும் சான்று காட்டி விளக்குக.
8. தற்குறிப்பேற்ற அணியை சான்று காட்டி விளக்குக.

## பிரிவு – 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. 'புகழ்' பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. காவிரி ஆறு பிறப்பு, வரவு, பெருமைகளைப் பற்றி விரிவாக எழுதுக.
3. 'செந்தமிழ்க்காஞ்சி' என்ற கவிதையில் தமிழ்த்தாயின் பெருமைகளாகப் பாவாணர் கூறும் கருத்துகளை எழுதுக.

## பிரிவு – 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. 'நடப்பதெல்லாம் நன்மைக்கே' பாடப்பகுதிகளில் உள்ள கதையைச் சுருக்கி வரைக.
2. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளைக் சான்று காட்டி விளக்குக.